த. நா.ச.பே. எண்: 06 நாள் : 07.01.2022

## ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பதிலுரை:

**மாண்புமிகு முதலமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021 ஆம் ஆண்டுக்கு விடைகொடுத்து, 2022 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கின்றோம். அனைவருக்கும் என்னுடைய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எதிர்காலத் தமிழகம் எல்லா வகையிலும் உயர்வையும், மேம்பாட்டையும் அடைய நாம் அனைவரும் சேர்ந்து உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. வீட்டுக்கு விளக்காக, நாட்டுக்குத் தொண்டனாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி அமைந்து நிகழ்த்தப்பட்ட முதல் ஆளுநர் உரையிலே, அனைத்து மாநிலங்களும் தலைநிமிர்ந்து நோக்கும் மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டுவோம் என்று குறிப்பிட்டிருந்தோம். அந்த இலக்கை நோக்கிய பயணத்துக்கு உற்சாகமும், உத்வேகமும் தரக்கூடிய வகையில் இந்தப் புத்தாண்டு, 2022 ஆம் ஆண்டு அமையும் என்ற அந்த நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்திலே நடைபெறுகிற முதல் கூட்டத்தொடர் என்கிற காரணத்தால்,

கடந்த 5 ஆம் தேதியன்று மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இந்த மாபெரும் சபைக்கு வருகை தந்து வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் உரையினை ஆற்றினார்கள். பொதுவாக ஆளுநர் உரை, அரசின் கொள்கை அறிக்கை; அதாவது, Statement of Policy என்றுதான் வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இலக்கணத்தையே, கடந்த காலத்தில் அ.தி.மு.க. ஆட்சியின்போது ஆளுநர் உரைமீது நான் கருத்துரை எடுத்துக் சொன்ன நேரத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அதுகுறித்து இந்த மன்றத்தினுடைய பழைய ஏடுகளை எடுத்துப் பார்த்தால் அனைவரும் புரிந்துகொள்ள முடியும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 6-5-1957 அன்று, ஆளுநர் உரை மீதான விவாதத்திலே கலந்துகொண்டு பேசுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார். ‘பொதுவாக, ஆட்சியாளர்களுடைய கொள்கைத் திட்டங்களை விளக்குவதே கவர்னருடைய பேருரை என்பதும், அக்கொள்கைத் திட்டங்களுக்கு ஏற்ப நிதியைப் பகிர்ந்தளிப்பதாகிய புள்ளி விவரங்களைக் கொண்டதே, வரவு செலவுத் திட்டம் என்பதுதான் நான் அறிந்துள்ள வரையில் உணர்ந்திருக்கிறேன்’’ என்று இவ்வாறு ஒரு சில வரிகளிலேயே, மிகவும் சுருக்கமாக, ஆளுநர் உரை எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்; வரவு செலவுத் திட்டம் எப்படி வரையப்பட வேண்டும்; என்று அவருக்கே உரிய சான்றாண்மையை அவர் வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கூற்றுப்படி, ஆளுநர் உரை, மிகுந்த கவனத்துடன் தயாரிக்கப்பட்டு அமைந்துள்ளது என்பதில் நான் உள்ளபடியே, மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆளுநர் உரையைப்

படித்து ஆராயும் நடுநிலையாளர்கள், இந்த உரை, கொள்கை மற்றும் செயல்திட்ட அறிக்கையாக, அதாவது Statement of Policy and Programme என அமைந்துள்ளதை நிச்சயம் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் மனதார நம்புகின்றேன். மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு இந்த அரசின் சார்பிலும், தனிப்பட்ட முறையிலே என்னுடைய சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள், தான் ஆற்றிய உரையில் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வரக்கூடிய விதத்தைப் பற்றி தன்னுடைய உரையிலே சொல்லியிருக்கிறார். அதேபோன்று, அறிவித்துள்ள திட்டங்கள் குறித்தும், செயல்படுத்தவிருக்கும் கொள்கைகள் குறித்தும் ஒவ்வொன்றாக விளக்கிப் பாராட்டிப் பேசியிருக்கிறார். அதற்காக மீண்டும் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவையெல்லாம் எனக்குக் கிடைத்த தனிப்பட்ட பாராட்டுகள் அல்ல. இந்த அமைச்சரவைக்கே கிடைத்திருக்கக்கூடிய பாராட்டுகள். இந்த அரசினுடைய அங்கமாக இருக்கக்கூடிய அதிகாரிகள், அலுவலர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய பாராட்டுக்கள். எங்களை ஆட்சிப் பொறுப்பிலே அமர்த்திய மக்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய பாராட்டுகள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்த உழைத்திருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட கூட்டணிக் கட்சித் தொண்டர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய பாராட்டுகள். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய

உணர்வோடுதான் இந்த மாமன்றத்தில் நான் கம்பீரமாக நின்றுகொண்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிட முன்னேற்றக் கழகம், எதிர்க்கட்சியாகவும் இருந்திருக்கின்றது; ஆளும் கட்சியாகவும் இருந்து மேண்மை கொண்டிருக்கிறது. 4-5-1957 அன்று ஆளுநர் உரைமீது பேசிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், "மேண்மை தாங்கிய கவர்னர் அவர்களுடைய உரையைப் பற்றி நான் போற்றவும் வரவில்லை; தூற்றவும் வரவில்லை; என்னுடைய கருத்துரையை ஆற்றவே வந்திருக்கிறேன்" என்று குறிப்பிட்டுச் சொன்னார். அத்தகைய நடுநிலை தவறாத மாண்பையும், பக்குவத்தையும் பெற்றிருப்பவர்கள் நாங்கள். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மேலும் என்ன சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், "ஆளுகின்றவர்கள் யாரைத் துணைக் கொள்ளல் வேண்டும் என்பதைப்பற்றி, வள்ளுவர் பெருமான் தன்னுடைய திருக்குறளில், "பெரியாரைத் துணைக்கோடல்" என்ற அதிகாரத்தில், ஆளுகின்றவர்கள் பெரியாரை தங்களுடைய துணைவராகக் கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார். எந்தப் பெரியாரைத் துணைகொள்ள வேண்டும் என்று கூறினார் என்று சொன்னால், எதையும் 'சரி - சரி' என்று சொல்லி, அதைக் கண்டிக்காமல் இருக்கின்ற பெரியாரை அல்ல. சபையிலே ஆளுகின்ற தம்மை இடித்துச் சொல்லுகின்ற பெரியாரைத் துணைவராகக் கொள்ளாத மன்னன், பகைவர்கள் இல்லையாயினும், தன்னைத்தானே கெடுத்துக் கொள்வான்; கெட்டு விடுவான் என்று சொல்லியிருக்கிறார்." என்று முத்தமிழறிஞர் கலைஞர் இந்த அவையிலே பேசியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு, தந்தை பெரியாரின் அரசாக, பேரறிஞர் அண்ணாவினுடைய அரசாக, (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய அரசாக (மேசையைத் தட்டும் ஒலி) நடைபோடுகிறது என்று நான் ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். அந்த அறிவிப்பில் துளி மாற்றம் எப்போதும் இல்லை; இருக்காது என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது ஏராளமான உறுப்பினர்கள் பேசி, அனைவருக்கும் கால அவகாசம் கொடுத்து, பிறகு நான் அவை எல்லாவற்றுக்கும் விரிவான பதிலுரை தருவதற்குக் காலம், நேரம் இல்லாத அளவுக்கு கொரோனா, ஒமைக்ரான் தொற்று மீண்டும் மிரட்டத் தொடங்கியிருக்கிறது. அதனால்தான் அலுவல் ஆய்வுக் குழுவினுடைய முடிவுக்கு ஏற்ப, விரைந்து இந்த அவையை முடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும், இரண்டு நாட்கள் இந்த அவையில் நடைபெற்றிருக்கக்கூடிய விவாதத்திலே 15 உறுப்பினர்கள் பேசி ஆக்கபூர்வமான கருத்துகளை அரசுக்குச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக முதலில் உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.தி.மு.க.-வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வைத்தியலிங்கம் அவர்கள் பேசும்போது, கொரோனா தடுப்புப் பணிகளில் இந்த அரசு துரிதமாகச் செயல்படுகிறது என்று சொன்னார்கள். அதற்காக முதலில் அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்திற்கு

அ.தி.மு.க. முழுமையான ஆதரவு தரும் என்று சொன்னதற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள் நேற்றையதினம் இங்கே பேசும்போது, ''ஜவுளித் துறையை மேம்படுத்துவதற்கு நூல் விலை ஏற்றத்தினைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். இதுகுறித்து நான் ஏற்கெனவே கடந்த 27.11.2021 அன்று ஒன்றிய அமைச்சருக்குக் கடிதம் எழுதி ''நூல் விலை ஏற்றத்தினைக் குறைக்க வேண்டும்'' எனக் கோரிக்கை விடுத்துள்ளேன். இந்த அரசு நெசவாளர்கள் நலன் காக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்று நான் தெரிவித்திருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள் ''சிறைச்சாலைகளில் நீண்ட காலமாக சிறைவாசம் அனுபவித்து வரும் சிறைக் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று ஒரு கோரிக்கை வைத்தார். நான் ஏற்கனவே அறிவித்தவாறு, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய 113-வது பிறந்தநாளை முன்னிட்டு, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் பிறகு பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகளை ஏற்று, தமிழகச் சிறைச்சாலைகளில் 10 ஆண்டுகள் மற்றும் 20 ஆண்டுகள் தண்டனை முடித்தும், பயன்பெற இயலாத - தகுதி பெறாத ஆயுள் தண்டனை சிறைவாசிகள், வயது முதிர்ந்த சிறைவாசிகள், பல்வேறு இணை நோய்கள் உள்ள உடல்நலம் குன்றிய சிறைவாசிகள், தீராத நோயுற்ற மற்றும் மனநலம் குன்றிய சிறைவாசிகள் உள்ளிட்டவர்கள் குறித்து தற்போது உள்ள சட்ட விதிகளின்படி ஆராய்ந்து பரிந்துரை அளிக்க மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற

ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. என். ஆதிநாதன் அவர்களின் தலைமையின்கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு அளிக்கக்கூடிய பரிந்துரையின் அடிப்படையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் செயல்பட்டுவரும் இந்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சின்னதுரை மற்றும் திரு. ராமச்சந்திரன் ஆகியோர் பேசும்போது, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவது குறித்துப் பேசினார்கள். இந்த அரசு விவசாயிகளின் நலனில் எப்போதும் அக்கறை உள்ள அரசு என்பதால், கடந்த அக்டோபர் 25-ஆம் நாள் தொடங்கி மூன்று கட்டங்களாக பெய்த வடகிழக்குப் பருவ மழை காரணமாக பாதிக்கப்பட்ட, பின் குறுவை பருவத்தில் விளைந்த பயிர்கள், சேதமடைந்த முன் பருவத்தில் பயிரிடப்பட்ட விளைந்த சம்பா நெற்பயிர்கள், மறு நடவுச் செலவு, பயிறு வகைகள், எண்ணெய் வித்துப் பயிர்கள், சிறு தானியப் பயிர்கள், கரும்புப் பயிர்கள், தென்னை பயிர்கள் ஆகியவற்றிற்கு நிவாரணமாக 1 இலட்சத்து 62 ஆயிரம் எக்டேருக்கும் அதிகமான நிலங்களுக்கு 132 கோடியே 12 இலட்சம் ரூபாய் நிதி மாநிலப் பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) சிறு, குறு, பெரு விவசாயிகள் 2 இலட்சத்து 65 ஆயிரத்திற்கும் மேல் பயனடையும் இந்த நிவாரண நிதி இரண்டொரு நாட்களில் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். ஒன்றிய அரசிடமிருந்து பேரிடர் மேலாண்மை நிதி வரவில்லை என்றாலும், விவசாயிகளின் நலன் காக்கும் இந்த

அரசு மாநில நிதியிலிருந்து இந்த நிவாரணத் தொகையை வழங்குகிறது என்பதனையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சிந்தனைச் செல்வன் அவர்கள் ‘‘நமக்கு நாமே திட்டத்தின்கீழ் உள்ள மூன்றில் ஒரு பங்கு மக்களுடைய பங்கு என்பதை பழங்குடியினர் மற்றும் பட்டியல் இன மக்களுக்கு ஐந்தில் ஒரு பங்கு என விதிகளைத் தளர்த்த வேண்டும்’’ என்று இம்மாமன்றத்திலே கோரிக்கை வைத்துள்ளார். அடித்தட்டு மக்களின் குரலுக்கு தொன்று தொட்டு செவி சாய்த்துவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு ‘‘நமக்கு நாமே திட்டத்தைப் பொறுத்தமட்டில், பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஐந்தில் ஒரு பங்கு என விதிகள் தளர்த்தப்படும்’’ என்று நான் அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், அரசுப் பள்ளிகளுக்கு மட்டும் ஸ்மார்ட் கிளாஸ் ரூம் என்று ஆளுநர் உரையில் அறிவிப்பு இடம்பெற்றிருந்தாலும் - மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, ‘‘மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் மட்டுமின்றி - பழங்குடியினர் நலப் பள்ளிகளிலும் ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகளும் - அதற்கு தேவையான உட்கட்டமைப்பும், கூடுதலாக நிதி ஒதுக்கி நிறைவேற்றித் தரப்படும்’’ என்பதனையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர் மாண்புமிகு கோ.க.மணி அவர்கள் பேசும்போது “பெண் குழந்தைகள் பாலியல் சீண்டல்களுக்கு உட்படும் நேர்வுகளில் தொடர்புடைய நபர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று கோரிக்கை வைத்திருந்தார். இதுதொடர்பாக நானே காவல் துறை அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தி குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களைத் தடுக்க, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்து 24 ஆயிரத்து 513 முகாம்கள் பள்ளிகள், கல்லூரிகளில் நடத்தப்பட்டுள்ளன. 249 விழிப்புணர்வு ஊர்வலங்கள் நடத்தப்பட்டுள்ளன. போக்சோ வழக்குகளை விசாரிக்க திண்டுக்கல், தருமபுரி, தேனி, திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில் புதிதாக “போக்சோ நீதிமன்றங்கள்” அமைக்கப்படுகின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு குழந்தைகளுக்கு எதிரான புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதனால் இதுவரை 2,363 போக்சோ வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பதிவுசெய்யப்பட்ட 338 வழக்குகளில், 135 வழக்குகளில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு விட்டது. வழக்குகளில் விரைவான விசாரணைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் அறிவுறுத்தியதற்கேற்ப, மே மாதத்திற்கு பிறகு சென்னை இராயப்பேட்டை காவல் நிலையத்தில் 19-5-2021 அன்று போடப்பட்ட போக்சோ வழக்கு ஒன்றில் 23 நாட்களுக்குள் குற்றப் பத்திரிக்கை

தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றத்திலே வழக்கு விசாரணை 82 நாட்களில் முடிந்து 31-8-2021 அன்று தண்டனையே வழங்கப்பட்டு விட்டது என்பதை நான் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இதுபோன்று முதல் தகவல் அறிக்கைகளில் விரைந்து குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்வது, நீதிமன்றங்களில் வழக்கு விசாரணையை விரைவுபடுத்துவது, ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தி, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுத்திட வேண்டும் என்று காவல் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் திரு. கு. செல்வப்பெருந்தகை அவர்கள், ‘‘பாக்ஸ்கான் தொழிற்சாலையில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்’’ என்று ஒரு கோரிக்கை வைத்தார் - நேற்றைய விவாதத்தின் போது அதை எடுத்துச் சொன்னார். இத்தொழிற்சாலையில் இருக்கக்கூடிய பெண் தொழிலாளர்கள் போராட்டம் நடத்துவதாக எனக்கு தகவல் வந்த உடன் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஆகியோரைப் போராட்டம் நடைபெறும் இடத்திற்கே அனுப்பி வைத்து, அந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நான் நடவடிக்கை எடுத்தேன். எனது அறிவுறுத்தலின் பேரில், 23.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில் தொழில் துறைக்கான அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தலைமையில், ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன்

பேச்சுவார்த்தை நடத்தி, தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்க்க பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு கூறிய ஆலோசனைகளைத் தவறாமல் செயல்படுத்துவதாக ஃபாக்ஸ்கான் நிறுவனமும் உறுதி அளித்திருக்கிறது. இதன் விளைவாக, ஃபாக்ஸ்கான் நிறுவனம் முதற்கட்டமாக இரண்டு விடுதிகளில் தங்கியிருக்கக்கூடிய 500 தொழிலாளர்கள் மூலம் 12.1.2022 அன்று உற்பத்தியைத் தொடங்க உள்ளது என்ற செய்தியும் தமிழ்நாடு அரசின் சிப்காட் நிறுவனத்தின் மூலம் ஏறத்தாழ, 18,750 பாக்ஸ்கான் நிறுவன ஊழியர்கள் மற்றும் பிற நிறுவன ஊழியர்கள் தங்குவதற்கேற்ப வல்லம் வடகாலில் ஒருங்கிணைந்த தங்கும் விடுதி அமைக்கப்படவுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது முத்தமிழறிஞர் கலைஞர் வழியிலே செயல்படக்கூடிய அரசு. மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு வித்திடும் தொழிற்சாலைகளின் முன்னேற்றத்திற்கும் என்றைக்கும் ஆதரவாக இருந்தும், தொழிலாளர்களுடைய சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும் செய்யும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த விடுதி ரூ.570 கோடி செலவிலே 20 ஏக்கர் நிலப்பரப்பிலே 8 தொகுதிகளாக 11 மாடிகளை கொண்டதாக வடிவமைக்கப்படவுள்ளது. புதுக் கட்டுமானத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பணிகளை மேற்கொண்டு, 15 மாதங்களில் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அம்மா மினி கிளினிக்குகளை மூடிவிட்டோம், அம்மா உணவகத்தைக் கவனிக்கவில்லை என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பட்டியல் படித்தார். இதுபோன்ற பட்டியலைப் படிக்க வேண்டுமானால் என்னிடம் நிறையவே இருக்கிறது.

தலைவர் கலைஞர் அவர்களால் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் மாபெரும் சட்டமன்ற - தலைமைச் செயலக வளாகம் கட்டப்பட்டு, அது அன்றைய மாண்புமிகு பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. அந்த இடத்தில்தான் சட்டமன்றமும் நடந்தது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும், சட்டமன்றம் நடந்த இடத்தை மருத்துவமனையாக மாற்றியது யார்? பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழா நினைவாக 170 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எட்டு மாடி அளவில் கட்டப்பட்ட மாபெரும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை மாற்ற முனைந்ததும், பராமரிக்காமல் பாழடைய வைத்ததும் யார்? அங்கிருந்த பேரறிஞர் அண்ணாவின் சிலையின் கீழ் இருந்த கலைஞர் பெயரை மறைத்தது யார்? கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில், கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தில் கலைஞர் பெயரை நீக்கியது யார்? செம்மொழிப் பூங்காவில் கலைஞர் பெயரை செடி, கொடிகளை வைத்து மறைத்துப் பராமரிக்காமல் விட்டது யார்? கடற்கரைப் பூங்காவில் இருந்த கலைஞர் பெயரை எடுத்தது யார்? ராணி மேரி கல்லூரியில் கலைஞர் அரங்கத்தின் பெயரை நீக்கியது யார்? கலைஞர் கொண்டு வந்தார் என்பதற்காகப் பெரியார் பெயரில் அமைந்த சமத்துவபுரங்களை பாழ்படுத்தியது யார்? உழவர் சந்தைகளை இழுத்து மூடியது யார்? தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் 2009 ஆம் ஆண்டு

தொடங்கப்பட்ட உடன்குடி பவர் கார்ப்பரேசன் லிமிடெட்டை முடக்கியது யார்? நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், வருமுன் காப்போம் திட்டம் ஆகியவற்றைக் கிடப்பில் போட்டது யார்? மதுரவாயல் - சென்னை துறைமுக உயர்மட்டச் சாலைத் திட்டத்தை முடக்கியது யார்? சமச்சீர்க் கல்விப் பாடப்புத்தகத்தில் கலைஞர் எழுதிய செம்மொழி வாழ்த்துப் பாடலையும், 7 ஆம் வகுப்பு பாடத்திட்டத்தில் நாடகக் கலை குறித்த பாடத்தில் இருந்த கலைஞர் பெயரையும் ஸ்டிக்கர் வைத்து மூடி மறைத்தது யார்?

இப்படி வரிசையாக நீண்டநேரம் என்னால் சொல்ல முடியும். பல கேள்விகளைக் கேள்வி கேட்க முடியும். இதை எல்லாம் நீங்கள் செய்தீர்கள் - அதனால் நாங்கள் செய்தோம் என்று நான் சொல்ல வரவில்லை. அப்படி நடந்துகொள்ளக்கூடிய எண்ணம் எனக்கு ஒருகாலும் ஏற்பட்டதில்லை; வரவும் வராது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் என்றுதான் இன்றைக்கும் இருக்கிறது. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் என்றுதான் இன்னமும் இருக்கிறது. சென்னை உயர்கல்வி மன்றத்துக்குள் அவருக்குச் சிலை இருக்கிறது. அவரது நினைவகம், பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. அதை இந்த அரசே பராமரித்துக் கொண்டும் இருக்கிறது. அம்மா கிளினிக் என்று பெயர் வைத்தீர்களே தவிர, கிளினிக் இல்லை. இல்லாத ஒன்றை எப்படி இந்த அரசு மூட முடியும்? அம்மா உணவகம் மூடப்பட்டுள்ளது என்று கூறினார்கள். மாண்புமிகு அவை முன்னவர் கூட, கலைஞர் பெயரில் இருந்த திட்டங்களை மாற்றப்பட்ட

ஆதங்கத்தில் "ஒரு உணவகத்தை மூடினால் அதில் என்ன தவறு?" என்று ஒரு கேள்வியை எழுப்பினார். என்னைப் பொறுத்தமட்டில், நான் அப்படி நினைக்கவில்லை. எந்த அம்மா உணவகமும் மூடப்படக் கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணம். அதனால்தான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் அம்மா உணவகங்கள் தொடரும் என்று நான் அறிவித்தேன். இன்றுவரை அந்த நிலைப்பாட்டில்தான் இருக்கிறேன். நிச்சயமாக இருப்பேன், அதில் எந்தவிதத்திலும் மாற்றம் ஏற்படாது என்பதை மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரை என்பது ஓராண்டுக்கு ஒருமுறை ஆற்றப்படுவது. ஆனால், சென்ற ஆளுநர் உரைக்கும், இப்போதைய ஆளுநர் உரைக்கும் ஆறு மாதம்தான் இடைவெளி. முந்தைய ஆளுநர் உரை, கடந்த ஜுன் 21 ஆம் நாள் ஆற்றப்பட்டது. இரண்டுக்கும் இடைப்பட்ட காலம் மிகக் குறைவுதான். ஆனால், இந்த இடைப்பட்ட காலத்திலே ஏராளமான சாதனைகளையும் நாங்கள் செய்திருக்கிறோம்; ஏராளமான சோதனைகளையும் நாங்கள் சமாளித்திருக்கிறோம். கொரோனா என்கிற பெருந்தொற்று காலத்திலே ஆட்சிக்கு வந்தோம். போர்க்கால வேகத்திலே செயல்பட்டோம். அதனால் இரண்டாவது அலைக்கு முற்றுப்புள்ளி வைத்தோம். அதிலிருந்து மீண்ட நிலையிலே, வரலாறு காணாத மழை, வெள்ளம் என்கிற இயற்கைப் பேரிடர் நம்மைச் சூழ்ந்தது. அதற்கான நிவாரணப் பணிகளையும் மின்னல் வேகத்திலே செய்து கொடுத்தோம்.

தேர்தலுக்கு முன்பு, நாம் பெற்றிருக்கக்கூடிய நம்பிக்கையை விட, இப்போது பல மடங்கு நம்பிக்கையை மக்களிடையே இந்த அரசு பெற்றுள்ளது என்பதை

எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய மனசாட்சி கூட மறுக்காது என்பதை நான் நம்புகிறேன். மக்களுக்கு உண்மையாக இருந்தோம். அதனால் மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றுள்ளோம். இதே உண்மைத் தன்மையோடுதான் நான் என் வாழ்நாள் முழுவதும் செயல்படுவேன் என்று திட்டவட்டமாக இந்த மாமன்றத்திலே உறுதி அளிக்கிறேன்.

நேற்றையதினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளைப் பற்றி இங்கு பேசினார்கள். கொரோனாவைத் தடுக்கின்ற அரண் என்பது தடுப்பூசிதான். நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தமிழ்நாட்டிலே முதல் தவணை தடுப்பூசி செலுத்தியவர்கள் 8.09 விழுக்காடு மட்டும்தான். இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்தியவர்கள் 2.84 விழுக்காடு மட்டும்தான். அதாவது முதல் நான்கு மாதங்களில் செலுத்தப்பட்ட தடுப்பூசியின் அளவு இவ்வளவுதான். ஆனால், அடுத்து நாங்கள் ஆட்சிக்கு வந்த ஏழே மாதங்களில், மக்களுக்கு பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, தடுப்பூசி செலுத்திக்கொள்வதை மக்கள் இயக்கமாக ஆக்கினோம். தற்போது தமிழ்நாட்டு மக்களிலே 87.27 விழுக்காடு மக்கள் முதல் தவணை தடுப்பூசி செலுத்தி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 61.25 விழுக்காடு மக்கள் இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்தியிருக்கிறார்கள். இதுவரை மொத்தம் 8.76 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டிருக்கிறது. 15 முதல் 18 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு ஜனவரி 3 ஆம் தேதி தடுப்பூசி போடும் பணியைத் தொடங்கி வைத்தேன்.

பள்ளி மாணவ, மாணவிகளுக்கு, பள்ளிகளுக்கே சென்று தடுப்பூசி போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 60 வயதுக்கும் மேற்பட்ட எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கும், முன்களப் பணியாளர்களுக்கும் ''கூடுதல் தவணையில்'' தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒமைக்ரான் வைரஸ் தொற்று ஏற்பட்டாலும், அதனால் பெரும் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கு தடுப்பூசியைப் பெரும்பாலானவர்களுக்கு செலுத்தியதுதான் காரணம். கொரோனா வார்டுக்கும் நேரில் சென்று ஆய்வு செய்தேன். சாலையில் இறங்கி முகக்கவசம் அணியாதவர்களுக்கு முகக்கவசம் அணிவித்தேன். ஒவ்வொரு உயிரும் நமக்கு முக்கியம் என்ற உன்னதமான எண்ணம்தான் இதற்குக் காரணம். உங்களின் அரசாக மட்டுமல்ல; உயிர் காக்கும் அரசாக இந்த அரசு இயங்கி வருகிறது என்பதற்கு இந்த ஒரு எடுத்துக்காட்டு போதுமானது. (மேசையைத் தட்டும் ஒலி)

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் மட்டுமல்ல; அனைத்துத் துறைகளும் இந்த அரசைப் பொறுத்தவரையில் மக்கள் நல்வாழ்வுத் துறைதான். அந்த எண்ணத்தோடுதான் அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வருகிறோம். கடந்த ஆளுநர் உரையில் 66 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அவற்றில் 49 அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டுவிட்டது என்பதை பெருமையோடு இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். மீதமுள்ள 17 அறிவிப்புகளில் ஒன்றிய அரசிடம் நிலுவையில் உள்ளவை 3. இன்னும் அரசாணை வெளியிட வேண்டிய அறிவிப்புகள் 14 என்ற நிலையில் உள்ளது. இவை ஏதோ அறிவிப்புகளாக மட்டுமல்ல; வெளியிட்ட அறிவிப்புகளில் 6 மாதத்தில் 75 விழுக்காடு அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டு

விட்டது. ஆகவே, இந்த அரசு அறிவிப்போடு நிற்பது இல்லை. எல்லா அறிவிப்புகளையும் ஆணைகளாக வெளியிடுகிற அரசு என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

சொற்கள் தனி மனிதனுடைய வெறும் சொற்களாக இல்லாமல், அரசாங்கத்தினுடைய ஆணைகளாக அதை மாற்றி வருகிறோம். இந்த ஆணைகள் அனைத்திற்கும் செயல் வடிவம் கொடுத்து வருகிறோம். அந்த அரசாணைகளில் மிக முக்கியமானவைகளை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி, கொரோனா கால நிவாரணமாக 4,000 ரூபாய்; ஆவின் பால் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு; பெட்ரோல் லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு; இலங்கைத் தமிழர்களுக்கு ரூபாய் 317 கோடியிலான பல்வேறு திட்டங்கள்; பெரியார் பிறந்தநாள் சமூகநீதி நாளாகக் கொண்டாட்டம்; மீனவர்களுக்கு வழங்கக்கூடிய சிறப்பு உதவித் தொகை 5,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக உயர்வு; விழுப்புரத்தில் சமூகநீதிப் போராளிகளுக்கு மணிமண்டபம்; நெசவாளர் கோரிக்கையை ஏற்று பஞ்சுக்கு ஒரு விழுக்காடு வரி ரத்து; அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு; தமிழ்நாடு அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் உருவாக்கம்; கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட நகைக் கடன்களும், தமிழக வரலாற்றில் முதன்முறையாக மகளிர் சுய உதவிக்குழுக்கள் பெற்ற கடன்கள் முழுமையாக ரத்து - இப்படி எண்ணற்ற சாதனைகளைச் செய்திருக்கிற அரசுதான் இந்த அரசு, உங்கள் அரசு என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 500 - க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கினோம். குறுகிய காலத்தில் அவற்றில் பெரும்பாலான வாக்குறுதிகளுக்கு ஆணைகள் வெளியிடப்பட்டு அவைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது. தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான கால அவகாசம் என்பது ஐந்து ஆண்டுகள். அந்த ஐந்து ஆண்டுகளுக்குள் நிறைவேற்றுவோம் என்பதுதான் தேர்தல் அறிக்கையின் சாராம்சம்.

ஆனால் பெரும்பாலான வாக்குறுதிகளை 5 மாத காலத்திலே நிறைவேற்றியுள்ள ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்பதை இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது பற்றியும், பேரறிஞர் அண்ணா அவர்களே முதலமைச்சராக இருந்தபோது விளக்கம் தந்திருக்கிறார்கள். நீங்கள் இந்தத் தேர்தல் வாக்குறுதிகளை என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். கேட்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் கேட்பதற்கு முழு உரிமை பெற்றவர்கள் எங்களுக்கு வாக்களித்தவர்கள். ஏனென்றால் நம்பி எங்களுக்கு வாக்களித்தார்கள். அவர்கள் கேட்க வேண்டும். ஆனால் நீங்கள் கேட்கிறீர்கள். பரவாயில்லை. ஏன் பராவாயில்லை என்று சொல்கிறேன் என்றால், வாக்காளர்களுக்கு அந்த அவநம்பிக்கை ஏற்படவில்லை. ஆகையால் அவர்கள் எங்களை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் கேட்கிறீர்கள் என்ன ஆயிற்று என்று? நான் முன்பே சொல்லியிருக்கின்றபடி

படிப்படியாக முறையாக உரிய காலத்தில் உரிய அளவிற்கு நிச்சயமாக அது நிறைவேற்றப்படும். உடனே இல்லை, எல்லாம் மொத்தமாக இல்லை, எதையாவது விட்டுவிடுவீர்களா, அதுவும் இல்லை என்றால் நிறைவேற்றப்படுமா? உரிய காலத்தில் முறையாக, படிப்படியாக, அதற்கென்ன தேவை, எது முதலில், எது இரண்டாவது, எது மூன்றாவது என்ற priority தேவை. எல்லோரும் எளிதாகப் புரிந்துகொள்ளும்படியான பேரறிஞர் அண்ணா அவர்களின் விளக்கத்தை அனைவரும் ஆய்ந்து சிந்தித்துப் பார்த்து ஏற்க வேண்டும் என்று நான் மிகுந்த அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சொன்னதை மட்டும் செய்யாமல் – சொல்லாததையும் செய்யக்கூடிய அரசுதான் இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில், சில முக்கிய சாதனைகளை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கொரோனாவால் குழந்தைகள் பள்ளிகளில் படிக்க முடியாததால் கற்றல் இழப்புப் பிரச்சினை பெற்றோர்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியது. அந்தக் கவலையைப் போக்க வந்ததுதான் “இல்லம் தேடி கல்வி” என்கிற திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) 200 கோடி ரூபாய் மதிப்பில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், 12 மாவட்டங்களில் முன்மாதிரி அடிப்படையில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. 80 ஆயிரத்து 138 இல்லம் தேடி கல்வி மையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு துறைகளைச் சேர்ந்த 80 ஆயிரம் அலுவலர்களைப் பயன்படுத்தி, ஜி.பி.எஸ். செயலி வாயிலாகக் கணக்கெடுத்து, இன்றைக்கு 1 லட்சத்து 73 ஆயிரத்து 792 இடைநின்ற குழந்தைகள், அவரவர் வயதுக்கு ஏற்ற வகுப்புகளில் வெற்றிகரமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

‘‘மக்களைத் தேடி மருத்துவம்’’ என்கிற மகத்தான திட்டம். மருத்துவ சேவையை மக்களின் இல்லத்திற்கே கொண்டு சேர்க்கின்ற திட்டம்தான் இது. 257 கோடி ரூபாய் மதிப்பில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 43 லட்சத்து 66 ஆயிரத்து 518 பேர் பயனடைந்திருக்கிறார்கள். மாநிலமெங்கும் மருத்துவ முகாம்கள் நடத்தி, இந்த முன்னோடித் திட்டம், இன்றைக்கு மக்களின் ‘‘இல்ல மருத்துவமனைகள்’’ போல செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கப் பள்ளிக்கூடங்களை அனைவரும் விரும்பும் பள்ளிக்கூடங்களாக மாற்றிட இந்த அரசு முனைப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. நான், சென்னை மாநகர மேயராக இருந்தபோது மாநகராட்சிப் பள்ளிகளை அந்தளவுக்கு தரம் உயர்த்தி நான் மேம்படுத்தினேன் என்பது உங்களுக்கே தெரியும். அதேபோல, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து அரசாங்கப் பள்ளிகளையும் நாங்கள் விரைவில் மேம்படுத்துவோம் என்பது உறுதி.

அதனால், இந்த ஆளுநர் உரையில் - மிக மிக முக்கியத் திட்டமாக அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ‘‘ஸ்மார்ட் கிளாஸ்’’ என்கிற திட்டம் - அதாவது திறன்மிகு வகுப்பறைகள் உருவாக்குகின்ற திட்டம் வெளியிடப்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டிலுள்ள 24 ஆயிரத்து 345 தொடக்கப் பள்ளிகளிலும் திறன்மிகு வகுப்பறைகள் தொடங்கப்படும். அரசுப் பள்ளிகள், அந்தப் பள்ளிகளின் வரலாற்றில் - இது ஒரு மாபெரும் கல்விப் புரட்சியை உருவாக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகள் - இந்தியாவிற்கே முன்னோடியாக செயல்படுகின்ற பெயரை

எட்டிட இந்த அரசு தனது அனைத்து சக்தியையும் பயன்படுத்தும் என்பதை நான் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு மிக முக்கிய உயிர் காக்கும் திட்டம், ‘‘இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டம்’’ ஆகும். அது உங்களுக்குத் தெரியும். சாலை விபத்துகளில் சிக்கி, பாதிக்கப்படுகிற விலைமதிப்பற்ற உயிர்களை காக்கக் கூடிய உன்னதமானத் திட்டம். தமிழ்நாட்டில் எந்த மூலையில் ஒருவர் விபத்துக்குள்ளானாலும், அது மற்ற மாநிலத்தவரானாலும், ஏன், வேறு நாட்டைச் சார்ந்தவராக இருந்தாலும் முதல் 48 மணி நேர சிகிச்சையை இந்த அரசே ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய கருணைமிக்க திட்டம். கருணையையே தன்னுடைய பெயரிலே கொண்ட முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் அரசு அல்லவா இது! அதனால்தான் அத்தகைய கருணை உள்ளத்தோடு இந்தத் திட்டத்தை நாங்கள் தீட்டியிருக்கிறோம். இந்தத் திட்டத்தின்கீழ், 609 மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டு, இதுவரை 5,274 பேர் அவசர சிகிச்சைகளைப் பெற்று பயனடைந்திருக்கிறார்கள். விபத்தில் சிக்குகிறவர்களுக்கு ‘‘ஒரு கோல்டன் திட்டம்’’ இது என்பது மட்டுமல்ல; மனித உயிர், மனித உரிமை இரண்டையும் இந்த அரசு இரு கண்கள் போல் காத்து வருகிறது என்பதற்கு மேலும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ள திட்டம்.

மேலும், பருவ மழையும், திடீர் மழையும் தமிழகத்தை விட்டு வைக்கவில்லை. சமீபத்தில் சென்னையில் ஒரே நாளில் இரண்டு முறை கனமழை கொட்டித் தீர்த்திருக்கிறது. கொட்டித் தீர்த்தது என்று சொல்வதைவிட, ஏதோ வானைப் பிளந்து ஊற்றுவதுபோல மழை சென்னை மாநகர வீதிகளை நிரப்பியது.

ஒவ்வொரு முறையும் மழை வெள்ளப் பாதிப்பு வந்தவுடன் முதல் ஆளாக களத்தில் நிற்கிறவர்தான் உங்களுடைய முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் துயரங்களை நேரில் கேட்டு, அவற்றைச் சீர்படுத்துவதற்கு, துடைப்பதற்கு, துன்ப, துயரங்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நமது அமைச்சர்களும், ஏன் நம்முடைய அதிகாரிகளும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் அவரவர் தொகுதிகளில் மழை வெள்ள நிவாரணப் பணிகளில் முழுமையாக ஈடுபட்டு, விவசாயிகளுக்கும், மக்களுக்கும் ஏற்பட்ட இன்னல்களை துடைத்தெறிவதில் பொறுப்புடன் செயல்பட்டிருக்கிறார்கள்.

அதேபோல, சமீபத்தில் பெய்த மழையின்போது நான் வெளியூர் பயணத்தில் இருந்தேன். சென்னை திரும்பியவுடன், நேரடியாக விமான நிலையத்திலிருந்து அந்த நள்ளிரவிலேயே மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் களமிறங்கி, நடவடிக்கை எடுத்தேன் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சென்னையில் மழை கொட்டி, குடிநீர் தரக்கூடிய ஏரிகள் எல்லாமே நிரம்பி வழிந்து, முறைப்படுத்தப்பட்ட தண்ணீர் வெளியேற்றத்தின்மூலம் மக்களுக்கு ஏற்படவிருந்த பாதிப்பைத் தவிர்த்தோம்; உடைமைகள் பாதுகாக்கப்பட்டன; உயிர்கள் காப்பாற்றப்பட்டன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேசிய பேரிடர் நிவாரண நிதிக்காக இந்த அரசு காத்திருக்கவில்லை. மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 801 கோடி ரூபாய் அதற்கென ஒதுக்கி பணிகளை முடுக்கி விட்டோம்; நிவாரண உதவிகளை வழங்கினோம். இதற்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி திருப்புகழ்

தலைமையில் குழு அமைத்து ஆலோசனைகளை அவர்களிடத்திலிருந்து பெற்றோம்; தொடர்ந்து பெற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த ஆலோசனைகளின் அடிப்படையில்தான் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் செயல்படுத்திட, நகராட்சி நிர்வாகத் துறை, நீர்வளத் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை போன்ற பல துறைகள் இணைந்து அந்தத் திட்டங்களைச் செயலாற்ற வேண்டியிருக்கிறது. இந்தப் பணிகளுக்காக முதற்கட்டமாக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்பதை இந்தப் பேரவையிலே நான் அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உடனடியாக இதற்கான முதற்கட்ட பணிகள் தொடங்கப்படும். இயற்கைப் பேரிடர்களிலிருந்து மக்களைக் காப்பதில் இந்த அரசு உறுதியோடு செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, அடுத்த பருவமழை வருகிறபோது, சென்ற மழையின் துயரங்கள் மக்களுக்கு துளியும் இருக்கக் கூடாது என்பதை மனதில் வைத்து இந்த அரசு தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

காவேரி டெல்டாவில் 61 கோடி ரூபாய் செலவில் குறுவை சாகுபடித் தொகுப்பு வழங்கியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தார்கள். மேட்டூர் அணையில் உரிய நேரத்தில் தண்ணீரைத் திறந்து, கால்வாய்களை முன்கூட்டியே தூர்வாரிய காரணத்தால் 4.9 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை நெல் சாகுபடி செய்து வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டிருக்கிறது.

மாற்றுத் திறனாளிகள் என்று பெயர் சூட்டிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய வழியிலே மாற்றுத் திறனாளிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, ஒரு அறிவிப்பை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். கடுமையான இயலாமை; கடுமையான அறிவுசார்

குறைபாடு; தசைச்சிதைவுகள் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பராமரிப்புத் தொகையாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய ரூ.1,500/- இனி ரூ.2,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் 2,06,254 பேர் பயனடைவார்கள். இதனால் அரசுக்கு ஆண்டொன்றிற்கு 123 கோடியே 75 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையிலிருந்து இன்றைக்கு வெளியில் சென்று பேசியிருக்கிறார். அதற்கான காரணங்கள் என்னவென்று உங்களுக்குத் தெரியும். அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. அதேபோல, வெளிநடப்பு செய்து தொடக்கத்திலேயே, இந்த கவர்னர் உரையைப் படிக்கத் தொடங்கியவுடனே வெளிநடப்பு செய்து, வெளியில்போய் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி கொடுத்தபோது என்ன சொன்னாரென்றால், மழை, வெள்ளம் குறித்தும், தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு சரியில்லை என்றும் சொல்லியிருக்கிறார். மழை வெள்ளம் குறித்துப் பேச அ.தி.மு.க.-வினருக்கு எந்தத் தகுதியும் இல்லை; எந்தத் தார்மீக உரிமையும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எந்தவித முன்னறிவிப்பும் செய்யாமல், செம்பரம்பாக்கம் ஏரியை நள்ளிரவில் திறந்துவிட்டு, சென்னை மாநகரத்தையே மிதக்க விட்டனர்; நூற்றுக்கணக்கானோர் மாண்டனர்; வீடுகளும், குடிசைகளும் மூழ்கின; ஏழை - நடுத்தர மக்கள் உடைமைகளை இழந்தனர்; சொந்த ஊரிலேயே தமிழர்கள் அகதிகளாக அலைந்தனர்; இது இயற்கைப் பேரிடர் இல்லை; செயற்கைப் பேரிடர்; man-made disaster என்று

பத்திரிகைகள் தலையங்கம் எழுதின; கடைசியில், புண்ணுக்குப் புனுகு தடவுவதைப் போல, நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. Smart City என்று விளம்பரப்படுத்திக் கொண்டு, எந்தெந்த வகையில் Smart ஆக வேலை பார்த்தனர் என்பதை நாடே வேடிக்கை பார்த்து, கைகொட்டி சிரித்தது.

மழை, வெள்ளம்தான் இப்படியென்றால், சட்டம்-ஒழுங்கு குறித்து பேசுவதற்காவது அவர்களுக்குத் தகுதி இருக்கிறதா? கொடநாடு கொலை. கொள்ளையில் தொடங்கி, பொள்ளாச்சி பாலியல் விவகாரங்கள், குட்கா வரை பல்வேறு முத்திரைகளை பதித்தவர்கள்தான் அவர்கள். நான் சொல்லித் தெரியவேண்டுமா? நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். இவற்றை எல்லாம் விரிவாப் பேசி சட்டசபையை, சத்த சபையாக மாற்ற நான் விரும்பவில்லை. குற்றம் சாட்டுவதற்கு முன்பாக தன் கையில் கறை இருக்கின்றதா என்பதைப் பார்த்துவிட்டுப் பேசவேண்டும். கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பாலியல் பலாத்காரம் நடக்கின்றது என்று பத்திரிகைச் செய்திகளை வைத்து எங்கேயாவது குற்றவாளிகள் கைது செய்யப்படாமல் இருக்கின்றார்களா? எங்கள் ஆட்சியில். எங்காவது குற்றவாளிகள் தப்பித்துப் போயிருக்கிறார்கள் என்ற செய்தி உண்டா? தப்பிய ஒரேயொரு ஒரு குற்றவாளியையும் 5 ஆம் தேதி கைது செய்துவிட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு யாராவது தலைமறைவாக இருக்கின்றார்களா, இருந்தால் சொல்லச் சொல்லுங்கள். பதுங்கும் எவரையும் இந்த அரசு பாய்ந்து பிடிக்கும் என்று நான் உறுதியளிக்கிறேன். பதுங்கக்கூடியவர்கள் யாராக இருந்தாலும் நிச்சயமாக அவர்களைப் பிடித்து உரிய தண்டனையை இந்த அரசு வழங்கும்; அதில் எந்த மாற்றமும் கிடையாது. காவல் துறையை ஏவல் துறையாக

மாற்றிவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார். தூத்துக்குடியில் 13 பேரை துள்ளத் துடிக்க சுடச் சொன்னது யார்? டி.வி.யைப் பார்த்துதான் நான் தெரிந்துகொண்டேன் என்று சொன்னது யார்? அதெல்லாம் நமக்குத் தெரிகின்றதோ இல்லையோ மக்களுக்குத் தெரியும்.

'எங்களது கட்சிக்காரர்களை விசாரணை என்ற பெயரால் அழைத்துச் செல்கிறார்கள்' என்று பொத்தாம் பொதுவாக எதிர்க்கட்சித் தலைவர் பேசியிருக்கிறார். அது எந்த வழக்கு என்பது தெரியவில்லை. அந்த வழக்கு பாயுமோ, இந்த வழக்கு பாயுமோ என்று பயந்து நடுங்குறவங்களுக்கெல்லாம் எங்களால் பாதுகாப்புத் தர இயலாது. தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சிதான் நடந்துகொண்டிருக்கிறது. தி.மு.க.-வைச் சேர்ந்தவர்களே யாராவது தவறு செய்தால், ஒரு சின்ன குற்றத்தில் ஈடுபட்டாலும், நிச்சயமாக சொல்கிறேன், உறுதியாக சொல்கிறேன், அண்ணாமீது ஆணையாகச் சொல்கிறேன், கலைஞர்மீது ஆணையாகச் சொல்கிறேன், இந்த ஸ்டாலின் உரிய நடவடிக்கை எடுப்பார். அதில் எந்த மாற்றமும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

"52 மணி நேர ஆபரேஷன் டிஸ் ஆர்ம்" நடத்தி, 6,112-க்கும் மேற்பட்ட ரவுடிகள் சுத்தி வளைக்கப்பட்டார்கள். "ஒருமாத சிறப்பு கஞ்சா வேட்டை" மேற்கொள்ளப்பட்டு 9,498 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். குட்கா, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பவர்கள் வேட்டையாடப்பட்டிருக்கிறார்கள். பள்ளி கல்லூரிகள் வட்டாரத்தில் போதைப் பொருள்கள் விற்கப்படுவதை நாம் அடியோடு தடுத்திருக்கிறோம். அதைக் கடுங்குற்றமாக்க சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் இரும்புக்

கரம் கொண்டு அடக்கப்பட்டு வருகிறது. ரவுடிகளை ஒடுக்க, கூலிப்படைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, மாநிலத்தில் ஒவ்வொருவரின் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டியதால்தான் இன்றைக்கு தொழில் வளர்ச்சியில், புதிய முதலீடுகளை நம்மால் ஈர்க்கமுடிகிறது. புதிய அத்தியாயத்தை இந்த அரசு எழுதிக் கொண்டிருக்கிறது. கடந்த ஏழு மாதங்களில் மூன்று முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தியிருக்கிறோம். அதன்மூலம் 56 ஆயிரத்து 230 கோடி அளவிலான முதலீடுகள் திரட்டப்பட்டிருக்கின்றது. 1 லட்சத்து 74 ஆயிரத்து 999 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற 109 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கின்றன. இதில், இதுவரை 21 ஆயிரத்து 508 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் துவங்கப்பட்டுள்ளன. மேலும், மாநிலத்தில் திட்டமிட்டப் பாதையில் தொழில் வளர்ச்சியை கொண்டு செல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் தமிழ்நாடு நிதி நுட்பக் கொள்கை FinTech Policy சமீபத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கையும், Tamil Nadu Export Promotion Policy வெளியிடப்பட்டிருக்கின்றது. ஒரகடத்தில் 150 ஏக்கர் பரப்பளவில் மருத்துவக் கருவிகள் பூங்கா அமைக்கப்பட இருக்கிறது. நாட்டுக்கே முன்னோடியாக தூத்துக்குடியில் மாபெரும் அறைகலன் பூங்கா 1,100 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த இரண்டு பூங்காங்கள்மூலம் மட்டும் 3 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட இருக்கின்றது. 2030 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு லட்சம் கோடி டாலர் என்கிற இலக்கை

எட்டுவதற்காகத்தான் நாங்கள் தினமும் உழைத்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற அரசு நலத் திட்ட நிகழ்ச்சிகளில், பல நிகழ்ச்சிகளுக்கு நானே நேரிடையாகச் சென்று கலந்து கொண்டிருக்கிறேன். 714.13 கோடி ரூபாய் மதிப்பிலான 185 அரசுத் திட்டப் பணிகளை தொடங்கி வைத்துள்ளேதோடு, 339.86 கோடி ரூபாய் மதிப்பிலான 190 புதிய திட்டங்களுக்கு நாங்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறோம். மேலும், பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 8 இலட்சத்து 18 ஆயிரத்து 835 பயனாளிகளுக்கு 3 ஆயிரத்து 642 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளேன். தெற்காசியாவிலேயே முதலீடுகளுக்கு உகந்த முதல் முகவரியாக தமிழ்நாட்டை மாற்ற இந்த அரசு உறுதி பூண்டிருக்கிறது.

ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டியுள்ளபடி, 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்பது இந்த அரசினுடைய கொள்கையாகும். தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம், 1956 - ல் புதிய வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கொரோனாவால் பாதிக்கப்பட்டு இறந்தவர் குடும்பத்திற்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம், 27 ஆயிரத்து 432 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்குப் பெறப்பட்ட 543 கோடி ரூபாயில், கோவிட் தடுப்பு நிவாரணப் பணிகளுக்காக 541.64 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. முதலமைச்சரின்

பொது நிவாரண நிதியில் வெளிப்படைத்தன்மை இருக்கும் என்று நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன்; அது தற்போது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ். 2 இலட்சத்து 29 ஆயிரத்து 216 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. மகளிருக்கு பேருந்துகளில் இலவசப் பயணத் திட்டம் நல்ல பலனைத் தந்திருக்கிறது. 40 விழுக்காடாக இருந்த மகளிர் பயணிகளின் எண்ணிக்கை தற்போது 61 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது.

இந்த நிதியாண்டில், 4 இலட்சத்து 2 ஆயிரத்து 829 பேர் கொண்ட 29 ஆயிரத்து 425 புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, ஆக்கிரமிப்பிலிருந்த 1,628 கோடி ரூபாய் மதிப்பிலான 432 ஏக்கர் பரப்பளவிலான திருக்கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

தேர்தலுக்கு முன்பு ஒரு தொலைநோக்குத் திட்டத்தை நான் வெளியிட்டேன். அந்தத் தொலைநோக்குத் திட்டத்தை நிறைவேற்ற சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைக்கப்பட்டுள்ளது. நிதிநிலை அறிக்கை, வேளாண் நிதிநிலை அறிக்கை, விதி 110-ன் கீழான அறிவிப்புகள் உள்ளிட்ட பல்வேறு தருணங்களில் இந்த 8 மாதங்களில் வெளியிடப்பட்ட 1,641 அறிவிப்புகளில், 1,238 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதாவது, வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் 75 விழுக்காடு அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 24 விழுக்காடு அறிவிப்புகள், அதாவது, 389 அறிவிப்புகளைச் செயல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பல்வேறு

கட்டங்களில் இருக்கின்றன. 1 விழுக்காடு அறிவிப்புகள், அதாவது 14 அறிவிப்புகள் மட்டும் ஒன்றிய அரசிடம் நிலுவையில் உள்ளன. இப்படி அறிவிப்புகளை, அதைச் செயல்படுத்தும் விதத்தை வெளிப்படையாக அறிவித்து, ஒளிவு மறைவில்லாத நிர்வாகம் கொடுக்கும் அரசாக இந்த அரசு விளங்குகிறது என்பதை இந்த மாமன்றத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன்.

இது ஒளிவுமறைவற்ற அரசு மட்டுமல்ல; அனைவருக்கும் ஒளிதரும் அரசு! இது சொன்னதைச் செய்யும் அரசு மட்டுமல்ல, சொல்லாததையும் செய்யும் அரசு! இது ஒரு கட்சியின் அரசு அல்ல, ஓர் இனத்தின் அரசு! இது தனிப்பட்ட ஸ்டாலினின் அரசு அல்ல, கோடிக்கணக்கான ஸ்டாலின்களின் எண்ணங்களைச் செயல்படுத்தும் அரசு! (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் இந்தப் பக்கம், நீங்கள் அந்தப் பக்கம் என்று ஓர் அடையாளத்துக்காகத்தான் உட்கார்ந்திருக்கிறோம். நாம் எல்லோரும் சேர்ந்து மக்களின் பக்கம்தான் என்பதை மக்களுக்குச் சேவை செய்வதன் மூலமாகக் காட்டி, எதிர்காலத் தமிழகத்தை ஒளிமயமானதாக அமைப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இந்த ஆளுநர் உரை நிச்சயமாக வழிகாட்டியிருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

ஆளுநர் உரையில், ‘அது இல்லை’, ‘இது இல்லை’ என்று குற்றம், குறை காண்பவர்களுக்கு, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதமைச்சராக இருந்தபோது, 30-3-1967 அன்று இதே பேரவையில் ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். அதை இங்கே நினைவுபடுத்துவது மிகப் பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். சில காரியங்கள், தேவைகள் என்பதற்காக ஆளுநர் உரையில் விடப்படவில்லை. கோடிட்டுத்தான் காட்டுவார்கள். கவர்னர் உரையில் கோடிட்டுக்

காட்டுவதை வைத்துக் கொண்டு, வெற்றிலை பாக்கு போடுவீர்களா என்று கேட்டால், சுண்ணாம்பு தடவாமல் போட்டுக் கொள்ள வேண்டுமென்று அர்த்தமல்ல. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு போடுவீர்களா என்று யாரும் கேட்பதில்லை. வெற்றிலை, பாக்கு போடுவீர்களா என்றுதான் கேட்பார்கள். போட்டுக் கொள்கிறேன் என்று சொல்வார்கள். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மூன்றும்தான் வரும். வெற்றிலை, பாக்குதானே போட்டுக்கொள்ளச் சொன்னார் என்பதால் சுண்ணாம்பு வேண்டாமென்று யாரும் புறந்தள்ளிவிடமாட்டார்கள். அதுபோல, கவர்னர் உரையிலே அது இல்லை, இது இல்லை, ஆகவே இதில் எதுவும் இல்லை என்று தள்ளிவிடலாமா! கவர்னர் உரையிலே சில குறிப்பிட்ட விஷயங்கள் இருக்கும். அதுதொடர்பாக நாம்தான் மற்ற விஷயங்களை யூகித்துக் கொள்ள வேண்டும். குறை காண்பவர்களுக்கு அறிஞர் அண்ணா அவர்களுடைய இந்த விளக்கமே போதும் என்று நான் நம்புகிறேன். இந்த அரசு நடைபோடும் பாதையை அடையாளப்படுத்தும் உரையை ஆற்றிய மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு மீண்டும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேசமயம், எதிர்வரும் பொங்கல் திருநாளையொட்டி, 2 கோடியே 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 1,296 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட செலவில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த வேளையில் நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். இதில் முகாம்களில் வாழக்கூடிய இலங்கைத் தமிழர்களின் குடும்பங்களும் அடங்குவார்கள். பொங்கல் பரிசினைப் பெற்று தமிழர் திருநாளை, கொரோனா கால கட்டுப்பாடுகளைப் பின்பற்றி மகிழ்ச்சியுடன் கொண்டாட

தமிழ்நாட்டு மக்களுக்கு என்னுடைய வாழ்த்துகளை இந்தத் தருணத்தில் நான் பகிர்ந்து கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய தமிழர் திருநாள் வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைவரும் கட்சி எல்லைகளை மறந்து - மக்கள் நிலையை உணர்ந்து இந்த ஆளுநர் உரையை மனப்பூர்வமாக வரவேற்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் ஏழு பேர் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது திருத்தங்கள் அளித்திருக்கிறார்கள். தங்கள் தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து குறிப்பிட்டிருக்கிறார்கள். உரிய அமைச்சர்களுக்கு நடவடிக்கை எடுக்க அது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் அளித்திருக்கக்கூடிய திருத்தங்களை திரும்பப் பெறுமாறு கேட்டு, அனைவரும் கட்சி எல்லைகளை மறந்து மக்கள் நிலையை உணர்ந்து இந்த ஆளுநர் உரையை மனப்பூர்வமாக வரவேற்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**